பக்கங்கள்:-21

# காலை முரசு

முழுக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 27 | செவ்வாய்க்கிழமை | 11.03.2025 | அதிர்வு 218

## சஜித் அணியின் கொழும்பு மேயர் வேட்பாளர் யார்?

“ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநாகர சபை மேயர் வேட்பாளராகக் கள மிறங்க நான் விரும்பவில்லை. அதற்கு மிகப் பொறுத்தமானவர் எரான் 06



# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் உடன் சமர்ப்பிக்குக!

## பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அநுர அரசிடம் பலரும் வேண்டுகோள்

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் பல்வேறு தரப்பினரும் அநுர அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் அல் ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்துக்களை அடுத்தே 1988 / 1990 காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை மீண்டும் பேசு பொருளாக மாறியுள்ளது. 06

# யாழ். மாநகர சபை வேட்பாளர்கள் குறித்து தமிழரசு கலந்தாலோசனை

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சின் யாழ்ப்பாணம் தொகுதிக் கிளையின் கூட்டம் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் மாநகர சபை வேட்பாளர்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் 07






கதிர்காமம் தேவாலயத்தின் பஸநாயக்க நிலமே டிஷான் குணசேகராவின் மாத்தறையில் உள்ள வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு பதினொரு மணி அளவில் சிவில் உடையில் சென்ற பொலிஸார் அதிரடியாகப் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தி இருக்கின்றனர்.

தேடுதலுக்கான வரண்ட் உத்தரவு எதுவும் இல்லாமல், கொழும்பிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.ஆர்.தயானந்த தலைமையில் சென்ற விசாரணைக் குழுவே இந்தத் தேடுதலை நடத்தி இருக்கின்றது.

உள்ளே புகுந்த பொலிஸ் குழுவினரின் ஆள் அடையாளத்தை நிரூபிக்கும்படி கேட்கப்பட்ட போதும் அதற்குப் பதில் அளிக்காமல் பலவந்தமாகத் தேடுதலில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் பஸநாயக்க நிலமேயின் 84 வயது தாயாரும் உதவியாளர்களும் மட்டுமே வீட்டில் இருந்திருக்கிறார்கள்.

மாத்தறை பிரிவுக்கு பொறுப்பான 06

# பல்கலைக்கு தகுதி பெற்றும் பல்கலை அனுமதி கிடைக்காத மாணவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்

## சண்முகம் குகதாசன் எம்.பி. சபையில் தெரிவிப்பு




கல்வித் துறையை மேம்படுத்த வேண்டுமாயின் பாடத் திட்டம்,கற்பித்தல் முறைமை,ஆசிரியர் பணிக்கான ஆட் சேர்ப்பு ஆகியவற்றில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோ ணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடு,ஆளணி மற்றும் பௌதீக வள பற்றாக் குறைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் குகதாசன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத் தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கு தகுதி பெற்றிருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் நிர்க்கதியாகியுள்ள னர் என அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட தரப்பினருக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கல்விமுறை தொழிற் சந்தையுடன் இணைந்ததாக இல்லை எனவும் தெரிவித்தார்.

இதன் காரணமாகப் பட்டதாரிகள் தொழிற்சந்தையில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனவே நாட்டினுடைய பாடத்திட்டங்களை தொழிற்சந் தையுடன் இணைந்ததாக மாற்றியமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வலியுறுத் தினார்.

# மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்

## இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவிப்பு




மலையகப் பெருந்தோட்ட பாடசாலைகளில் பட்டதாரி ஆசி ரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலு சாமி இராதாகிருஸ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

மலையகத்திலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாகவும் நேற்றைய குழு நிலை விவாதத்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தை எந்த வகையிலும் குற்றஞ்சாட்ட முடியாது எனவும் இதுவே தேசிய மக்கள் சக்தியின் ஆரம்பம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்த வருட வரவு – செலவு திட்டத்தின்போது தாம் குறிப் பிட்டவைகள் உள்வாங்கப்படவில்லை எனில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகி ருஸ்ணன் குறிப்பிட்டார்.

# பல பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில்



மட்டக்களப்பு காலி, இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கிய மற்ற நிலையில் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக் கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கிழக்கு, ஊவா ஆகிய மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவை மற்றும் அம்பாந் தோட்டை மாவட்டங்களில் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றர் அளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவ தாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள் ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைவர் பிரபாகரனின் சாவை அறிவிக்கும் நிகழ்வு நேற்று சுவிஸர்லாந்தில் நடந்தது



தலைவர் பிரபாகரனின் சாவை அறிவிக்கும் நிகழ்வு நேற்று சுவிஸில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனையின் இணைப்பாளர் இ .பிரசாத. என்பவரினால் இந்த அறிவிப்பை வெளியிடும் காணொலிக் காட்சிகள் நேற்று சமூக ஊடகங்களில் வெளியாகின. அந்த அறிவிப்பில் அவர் கூறியவை வருமாறு:-

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வீரச்சாவு அறிவித்தல்.

உலகெங்கும் பரந்து வாழும் எம் உயிரினும் மேலான தமிழ் மக்களே!

எமது விடுதலை இயக்கத்தின் தலைவரும், தமிழினத்தின் ஒப்பற்ற பெருந் தலைவருமான தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், இறுதி வரை கொண்ட கொள்கையில் உறுதிதளராது, முப்பத்தாறு ஆண்டுகளாக எதிரிப் படைகளோடு அடிபணியாது போராடி நந்திக்கடலோரம் நடைபெற்ற இறுதிச்சமரில் வீரகாவியமானார்.

சிறிலங்கா அரசுக்கும் அதன் இராணுவ இயந்திரத்திற்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய உலகநாடுகளின் கூட்டுப்படை வலிமையையும் ஏகாதிபத்திய அரசுகளின் சூழ்ச்சித் திட்டங்களையும் எதிர்கொண்டு, அனைத்து தடைகளையும் தனது பேராற்றலால் உடைத்தெறிந்து தமிழினத்தின் ஆற்றலோனாக தேசியத் தலைவர் திகழ்கின்றார்.

தமிழினத்தின் தேசிய அடையாளத்தை நிலைநிறுத்தி, முள்ளிவாய்க்கால் இறுதிப்போர் வரையும் உறுதி குலையாது படைநடத்தி, தான் வரித்துக்கொண்ட உயரிய இலட்சியத்தையும் தனது வழிநடத்தலையும் உளமார ஏற்று, உயிர்களை விதையாக்கிய மாவீரர்களின் தியாகங்களையும் இலட்சியக் கனவளையும் நெஞ்சிருத்தி, எதிரிப்படையோடு இறுதிக்கணம் வரை துணிவோடு களமாடி எமது தேசியத்தலைவர் அவர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்பதனை தமிழீழ மாவீரர் பணிமனை அறியத்தருகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் வீரச்சாவினை உறுதிப்படுத்தி, நெஞ்சைப் பிளக்கும் இப்பெரும் துயர்மிகு அறிவிப்பை, அவரது வழிநடத்தலை உளமார ஏற்றுப் போராடிய போராளிகளுக்கும், ஒப்பற்ற தேசியத் தலைமையாக தமது நெஞ்சங்களில் சுமந்திருக்கும் எம்முயிரினும் மேலான தமிழ் மக்களுக்கும் பெருந்துயரத்தோடு வெளிப்படுத்திக் கொள்ளும் அதேவேளை, எமது வீரவணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காலம் காலமாக அடிமை வாழ்வுக்குள் சிக்குண்டு சிதைந்து கொண்டிருந்த ஈழத்தமிழினத்திற்கு கிடைத்த ஒரு சூரியத் தேவனாக, இந்த நூற்றாண்டில் உலகமே வியக்கும் பல அற்புதமான வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து, தமிழினத்தின் அதிஉச்ச வீர அடையாளமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் திகழ்கின்றார். வரலாற்றிலிருந்து எவராலும் அழிக்கப்பட முடியாதவாறு, எதிரியாலும் போற்றப்படும் போரியல் அறத்துடனும் உயர்ந்த இராணுவ ஒழுக்கத்துடனும் தமிழர் மனங்களில் அவர் நிலைபெற்றுவிட்டார் என்பதால், செம்மொழியாம் எம் தாய்த் தமிழ்மொழி வாழும் காலமெல்லாம் எம்தேசத் தலைவரும் நிலைபெற்று நித்திய வாழ்வு வாழ்வார்.

எமது அன்பிற்குரிய தாய்த்தமிழ் உறவுகளே!

தமிழினத்தின் கலங்கரை விளக்காக, தமிழ் மக்களை அடிமைத் தனத்திலிருந்து கரைசேர்க்கப் புறப்பட்டு, அடிமை விலங்குடைத்து, கொண்ட கொள்கையில் இறுதி வரை உறுதி தளராது போராடிய எமது தேசியத் தலைவர் அவர்களும் மாவீரர் வரிசையில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழினத்தின் விடிவிற்காக தனது உயிரை அர்ப்பணித்த எமது தேசியத் தலைவருக்கு உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடி பேரெழுச்சியோடு நெஞ்சங்களில் இருத்தி, தமிழீழப் போராட்ட வரலாற்றின் மிகப்பெரும் அடையாளமாக எமது இதயக் கோயில்களில் வைத்து பூசிக்கப்படக் கூடிய வராக்க வேண்டியது ஒவ்வொரு தமிழர்களதும் மிகப்பெரும் கடமையும் பொறுப்புமாகும்.

ஆகவே வரலாற்றில் எமக்கு கிடைத்த பொக்கிசமான எமது தேசத் தலைவருக்கு, தலைவரின் வழியில் களமாடிய போராளிகள், சமூக கட்டமைப்பினர், புலம்பெயர், தாயக மற்றும் தமிழக உறவுகள் என அனைவரும் ஒன்றிணைந்து அவரது வீரவணக்க நிகழ்வை தாயகம், தமிழகம் உட்பட தமிழ் மக்கள் பரந்துவாழும் உலகப்பரப்பெங்கிலும் நடாத்தும் அதேவேளை, அனைவரும் ஒன்றிணையக்கூடிய ஐரோப்பிய நாடொன்றிலும் 2025 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உலகம் போற்றும் வகையில்

பேரெழுச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.

எங்கள் பெருந் தலைவர் அவர்களால் கட்டமைத்து வளர்த்தெடுக்கப்பட்டு நமது கைகளில் தரப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, அதே உறுதிப்பாட்டுடனும் அதே கட்டுக் கோப்புடனும் அதே ஒருங்கிணைவுடனும் மாறி வரும் பூகோள அரசியல் மாற்றங்களுக்கேற்ப தடம் மாறாது முன்னெடுத்துச் சென்று எமது இறுதி இலட்சியத்தை அடைவோமென தமிழீழத் தேசியத் தலைவர் மீதும் மாவீரர்கள் மீதும் உறுதியெடுத்துக்கொள்கிறோம். - என்று உள்ளது.

# திவுலப்பிட்டி இடம்பெற்ற வாகன விபத்தில் 9 பேர் காயம்

திவுலப்பிட்டி - நால்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 3 பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிஉல்ல பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், கொழும்பில் இருந்து கிரிஉல்ல நோக்கி பயணித்த ட்ரக்குடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்திற்குள்ளான மேற்படி பஸ் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த ஓடைக்குள் கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

# நாளாந்தம் 4,000 முதல் 4,500 வரையான கடவுச்சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை




கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான 24 மணித்தியால சேவையின் கீழ் நாளாந்தம் 4,000 முதல் 4,500 வரையான கடவுச்சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக, கடவுச்சீட்டுக்கள் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு கூறியுள்ளது.

24 மணி நேர சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதிக்குள் முன் பதிவு செய்ய வேண்டும்.

திங்கட்கிழமை காலை 6 மணி முதல், வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை இவ்வாறு முன் பதிவு செய்ய முடியும்.

கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் செயன்முறையை விரைவுபடுத்துவதற்காக ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை கோருபவர்களுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் அந்த சேவையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# செவ்வந்தி தொடர்பில் போலி தகவல்களை வழங்கிய சந்தேக நபருக்கு 24ஆம் திகதி வரை விளக்கமறியல்





கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பில் தேடப்படும் பிரதான சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி குறித்து போலியான தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை – திக்வெல்ல பகுதியைச் சேர்ந்த இந்த சந்தேக நபர் இன்றைய தினம் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல முன்னிலையில் பிரசன்னப் படுத்தப்பட்டபோது, இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் தேடப்படும் இஷாரா செவ்வந்தி என்ற பெண் குறித்து இந்த சந்தேக நபர் தமது தொலைபேசி ஊடாக பொலிஸாருக்கு போலியான தகவல்களை வழங்கியுள்ளார் என குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் தேடப்பட்டுவரும் இஷாரா செவ்வந்தி தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கு வழிவகுக்கும் தகவல்களை வழங்குவோருக்கு 12 லட்சம் ரூபாய் சன்மானமாக வழங்கப்படும் என பொலிஸ் அறிவித்துள்ளது.

# எந்த மதத்தையும் நிந்திக்கும் விதத்தில் செயற்படவில்லை: அர்ச்சுனா எம்.பி.

பொதுவாக மக்களிடம் இருந்து வந்த கோரிக்கைகளையே தாம் நாடாளுமன்றில் முன்வைத்தேன் என்றும் இஸ்லாமிய மதத்தில் மாற்றங்களை ஏற்படுத்த எவரும் முயற்சிக்கவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

சிறுபிள்ளைகளையும், பெண்களையும் மாத்திரமே தாம் கருத்திற் கொண்டு பேசியதாகவும் அவர் தெரிவித்தார்.




எந்த மதத்தையும் நிந்திக்கும் விதத்தில் செயற்படவில்லை என தம் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இதனைக் கூறியிருந்தார்.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தெரிவிக்காமல் இந்தத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு இருக்கின்றது.

தலைமறவாகி இருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்த வீட்டில் ஒளிந்திருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டு இருக்கின்றது.

இந்தத் தேடுதலுக்கான நேரம் தீர்மானிக்கப்பட்ட விடயத்திலும் ஒரு சூசகமான யுக்தி புதைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

கதிர்காம தேவாலயத்தின் நிதி கணக்கு வழக்குகளில் குளறுபடி இருப்பதாக சிவில் செயற்பாட்டாளர் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் பஸநாயக்க நிலமே டிஷான் குணசேகரா நேற்றுக் காலை 11 மணிக்கு கொழும்பில் குற்ற புலனாய்வு திணைக்களத்தின் முன்னால் முன்னிலையாகுமாறு கேட்கப்பட்டிருந்தார். அதற்காக அவர் கொழும்பு புறப்பட்ட நிலையில், அவரது வீட்டை நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு பொலிஸார் இலக்கு வைத்துத் தேடியிருக்கின்றனர் – அங்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஒளிந்திருக்கிறார் என நம்பிய தகவலின் பெயரில்.

தேடுதல் வேட்டையில் தென்னகோன் தொடர்பில் எந்தத் தகவலும் கிட்டவில்லை என விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

\+ + +

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. எல்லாக் கட்சிகளும் வேட்பாளர் தெரிவில் மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்றன.

தமிழர் பிரதேசத்தில் – குறிப்பாக வடக்கில் – எல்லாக் கட்சிகளுமே, ஆளும் தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தமிழரசு கட்சி உட்பட எல்லாத் தரப்புக்களுமே போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை தேடிப் பிடித்து நிரப்ப முடியாமல் கஷ்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'தேர்தலில் போட்டியிடுகின்றீர்களா?' – என்று கேட்க முதல் சீமான் பொதுஜனங்கள் 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என ஓடித் தப்ப முயல்வதாகத் தெரிகிறது.

அதனால் பிரதான கட்சிகளே முக்கியமான சில உள்ளூராட்சி சபைகளுடன் தங்கள் நப்பாசையை நிறுத்திக் கொள்ள தீர்மானித்து இருக்கின்றன எனத் தெரிகிறது.

போதாக்குறைக்கு உள்ளூராட்சி தேர்தல்களில் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தொகை அதிகம். பொதுத் தேர்தலில் ஒரு வேட்பாளருக்கு 2,000 ரூபா கட்டினால் போதும். ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தின்படி ஆளுக்கு 5,000 ரூபா கட்டுப் பணம் கட்ட வேண்டும். அதுவும் யாழ்ப்பாண மாநகர சபை போன்றவற்றுக்கு தலா 48 வட்டார வேட்பாளர்களையும் அதற்கு சமதையாக பட்டியல் வேட்பாளர்களையும் போடுவது என்றால் கட்சிகள் களைத்துப் போய் விடுகின்றன. கட்டமும் அதிகம் என்பதால் பட்டியலில் பெயர் கொடுக்க கூட களத்தில் இறங்க பொது மக்கள் பின்னிற்பதாக தகவல். அதனால் இம்முறை தேர்தலில் போட்டியிடும் அணிகளின் எண்ணிக்கை வடக்குக் கிழக்கை பொறுத்தவரை முன்னைய நிலைமையிலும் விட மிகக் குறைவாக இருக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

## சஜித் அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமரத்னவே. உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும், அவரது பெயர் இதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு மாவட்ட செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பொதுத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைத் தொகுதியில் தேசிய மக்கள் சக்தி பிரம்மாண்ட வெற்றியைப்பெற்றுக்கொண்டது. ஆனால், தற்போது சென்று அப்பிரதேசங்களிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடம் அவர்களது நிலைப்பாடுகளைக் கேட்டறிந்தால், தமது முடிவு எந்தளவுக்கு தவறானது என்பதைக் கூறுவர்

கடந்த ஆட்சியாளர்கள் மீது காணப்பட்ட கோபத்தினாலேயே அவர்கள் இவ்வாறு வாக்களித்தனர். ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவ்வாறு ஊர், பெயர் தெரியாதவர்களைத் தெரிவு செய்ய முடியாது. அது பொறுத்தமானதாக இருக்காது. தமக்காக சேவை செய்தவர்களை அல்லது செய்யக் கூடியவர்களையே தெரிவு செய்ய வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பெண்ணொருவர் மாநகர மேயர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. எவ்வாறிருப்பினும் அவருக்குப் போட்டியாக எமது கட்சியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன களமிறக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

அவர் இந்தப் பதவிக்கு மிகப் பொறுத்தமானவரானவர். கொழும்பு மாநகர சபை என்பது சாதாரணமானதொரு இடம் அல்ல. நான் கொழும்பு மாநகர சபைக்கு உரித்துடையவள் அல்ல.

எனவே, நான் மேயர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு எதிர்பார்க்கவும் இல்லை. அவ்வாறு அந்தத் தெரிவுக்குச் செல்வதானால் கடுவலை தொகுதி அமைப்பாளர் பொறுப்பைக் கைவிட்டுச் செல்ல வேண்டியேற்படும்.

நான் அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்தால் பொதுத் தேர்தலில் எனக்கு ஆதரவளித்தவர்களை அநாதரவாக விட வேண்டியேற்படும். அதனை நான் விரும்பவில்லை. அதேவேளை, சகல தகைமைகளுடன் உள்ள எரான் விக்கிரமரத்னவே இதற்கு மிகத் தகுதியானவர் என்பதே எனது நிலைப்பாடாகும்."

– என்றார்.

---

## பட்டலந்த ஆணைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

### பட்டலந்த அறிக்கை என்றால் என்ன?

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

1988/1990 காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் நியாயத்தை நிலைநாட்டுவதாக அவர் தேர்தல் மேடைகளில் வாக்குறுதியளித்தார்.

1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995 செப்டெம்பர் 21ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவே பட்டலந்த விசாரணை ஆணைக்குழு எனப்படுகின்றது.

அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பியகம பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் உள்ள வீடுகளுக்குள் சட்டவிரோதமான முறையில் இளைஞர்களைத் தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்தமை அல்லது காணாமல் ஆக்கியமை தொடர்பில் விசாரணை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் கண்டு பரிந்துரை செய்வதே இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும்.

அப்போதைய மேன்முறையீட்டு நீதிமன்றநீதிபதிடி.ஜயவிக்கிரமதலைமையில் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக மேல் நீதிமன்ற நீதிபதி என்.ஈ.திஸாநாயக்க செயற்பட்டார்.

இந்த விசாரணைகுழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகப் பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டதுடன் சட்டமா அதிபர் திணைக்களம் சாட்சிகளை வழிநடத்தியது.

தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசரும் அப்போதைய அரச தரப்பு சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட மற்றும் தற்போதைய ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன ஆகியோரைச் சட்டமா அதிபர் திணைக்களம் இதற்காக நியமித்திருந்தது.

ஆணைக்குழுவின் காலம் 12 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதுடன் 1998 மார்ச் 26ஆம் திகதி ஆணைக்குழுவின் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டது.

### பட்டலந்த ஆணைக்குழு - ரணிலுக்கு இடையிலான தொடர்பு என்ன?

குறித்த காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகித்தார்.

பட்டலந்த வீடமைப்புத் தொகுதி அந்தச் சந்தர்ப்பத்தில் கைத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமாகவிருந்தது.

ஆணைக்குழுவில் வெளிக்கொணரப்பட்ட சாட்சியங்கள் மூலம் ஏ 2/2, ஏ 2/1, ஏ 2/3, ஏ 1/7, பி 2, பி 1, பி 7 ஆகிய வீடுகளை ரணில் விக்கிரமசிங்கவே பயன்படுத்தியிருந்தார்.

பேலியகொடை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி டக்ளஸ் பீரிஸ் உள்ளிட்ட பொலிஸ் குழுவினருக்கும் இந்த வீட்டுத்திட்டத்தின் வீடுகள் வழங்கப்பட்டிருந்தமையும் ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிக்கொணரப்பட்டது.

களனி நாசகார செயல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கும் இங்கு

07

## பட்டலந்த ஆணைக்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

13 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இதிலுள்ள ஒரு வீடு ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய வீடுகளை வழங்கும்போது ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையும் அறிக்கையில் வெளியானது.

பட்டலந்த ஆணைக்குழுவுக்கு ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து விசாரணை நடத்தவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

சுமார் 3 வருடங்களாக சாட்சியங்களைச் சேகரித்த பட்டலந்த ஆணைக்குழு இறுதி அறிக்கையில் சில பரிந்துரைகளை முன்வைத்தது.

இந்த வதை முகாமுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மனித உரிமைகளைப் பாரதூரமான முறையில் மீறியுள்ளதால் அவர்களது பிரஜாவுரிமையைப் பறிப்பதற்குத் தேவையான மேலதிக அதிகாரத்தை உயர்நீதிமன்றத்துக்கு வழங்குமாறு ஆணைக்குழு முக்கிய பரிந்துரையை முன்வைத்தது.

நிறைவேற்று அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்ற அச்சம் இல்லாததால் மீண்டும் மீண்டும் சட்டத்தை மீறியுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பரிந்துரையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### பட்டலந்த ஆணைக்குழு அறிக்கைக்கு என்ன நடந்தது?

அறிக்கை அப்போதைய ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டாலும் அதிலிருந்த பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தேர்தல் மேடைகளில் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை ஒரு தலைப்பாக மாறினாலும் நீதியை நிலைநாட்டுவதற்காக அது முன்வைக்கப்படவில்லை.

பி.பி.சி.செய்தியாளர்பிரான்ஸஸ்ஹெரிசன் அல் ஜசீரா நிகழ்ச்சியின் போது இந்த அறிக்கையைக் காண்பித்து ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சவால் விடுத்தார்.

அரசின் உத்தரவுக்கு அமைய இந்த அறிக்கை அச்சிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயர் இம்மானுவேல் ஆனோல்ட் மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ். தொகுதிக் கிளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## துரதிர்ஷ்ட நிலைமை

நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியாவின் கீழ் உள்ள கல்வி அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கல்வி அமைச்சின் கீழ் கல்வி நடவடிக்கைகள் வருகின்றன. ஆனால் வன்னிப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் பாதுகாப்பு படையினரால் முன்பள்ளிகள் நடத்தப்படுகின்றன என்ற தகவலை அவர் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த முன்பள்ளிகளில் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் சிவில் பாதுகாப்பு படைப் பிரிவின் ஊடாக மாதாந்தம் தலா முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் ரூபா வரை சம்பளம் வழங்கப்படுவதாகவும், அதே சமயத்தில் ஏனைய இடங்களில் உள்ள முன் பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சினால் ஆக ஆறாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுவதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

கல்வி அமைச்சின் விவகாரத்தை - கற்பித்தல் விடயத்தை - பாதுகாப்பு அமைச்சு கையாள்வது எங்ஙனம் என்று கேள்வி எழுப்பிய அவர், இந்த நடவடிக்கை வன்னியில் தமிழர் பிரதேசத்தில் மட்டும் விநோதமாக முன்னெடுக்கப்படுவது ஏன் என்றும் கேட்டார்.

கல்வித்துறையை இராணுவ மயப்படுத்தும் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் மூலம் 40 ஆயிரம் ரூபா வரை மாதாந்த வேதனம் வழங்கும் அரசாங்கம், ஏனைய இடங்களில் உள்ள முன் பள்ளி ஆசிரியர்களுக்கு தலா ஆறாயிரம் ரூபா மாத்திரமே பிச்சை பணம் போல வழங்குவதாகவும் அவர் வேதனையோடு அம்பலப்படுத்தி இருக்கிறார்.

இந்த நடவடிக்கை தமிழர் பிரதேசத்தில் மாத்திரம் ஏன் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் கேட்டார்.

முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக - நியாயமான - சம்பளம் வழங்கப்பட வேண்டும், அந்த விடயம் கல்வி அமைச்சின் மூலம் கையாளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

இந்த விடயத்தை கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினாலும், அவர் சுட்டிக்காட்ட மறந்த இன்னொரு முக்கிய விடயமும் இதில் கவனிக்கப்பட வேண்டும்.

முன்பள்ளி உட்பட பாடசாலை கல்வி விடயம் அரசமைப்பின் 13 வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விவகாரமாகும்.

இந்த விடயத்தில் உரிய நியதிச் சட்டங்களை மாகாண சபை இயற்றியிருக்குமானால் அந்த விவகாரங்களைப் பாதுகாப்பு அமைச்சோ சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவோ கையாள முடியாது. அதை சட்டத்தின் மூலம் தடுக்க மாகாண சபைக்கே அதிகாரம் இருந்திருக்கும்.

2013 முதல் 2018 வரை வடக்கு மாகாண சபையை தமிழ் தேசிய தரப்புகள் கையில் வைத்திருந்த போதிலும், ஆக வெறுமனே பத்து நியதிச் சட்டங்கள் மாத்திரமே உருவாக்கப்பட்டன. மற்றைய மாகாண சபைகள் நூற்றுக்கும் அதிக நியதிச் சட்டங்களைத் தமக்குத் தமக்கென உருவாக்கி வைத்திருக்கின்ற போது, வடக்கு மாகாண சபை நியதிச் சட்ட உருவாக்கத்தில் உரிய கவனம் எடுக்கவில்லை. அது கவனம் எடுக்கத் தவறிய பல்வேறு துறைகளில் ஒன்று கல்வி துறையாகும். முன்பள்ளிக் கல்வி உட்பட கல்வி விடயங்களை மாகாண சபை தன் கைவசப்படுத்தி, உரிய சட்டங்களை ஏற்படுத்தியிருக்குமானால் (ஏனைய மாகாணங்களில் அத்தகைய சட்டங்கள் நடைமுறையில் உள்ளன) இப்படி சிவில் பாதுகாப்புப் படையினர் தமிழர் பிரதேசத்தின் முன் பள்ளிக் கல்வியைத் தாங்கள் நேரடியாக கையாளும் துரதிஷ்ட நிலைமை வந்திருக்காது என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.








# புதுக்குடியிருப்பில் மாபெரும் பிரதேச விற்பனை சந்தை

(பா.சதீசன்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான விற்பனை சந்தை ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை பஸ் தரிப்பு நிலையத்தில் இடம்பெற்றிருந்தது.

தற்கால பொருளாதார நெருக்கடி காலத்தில், உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு, மகளீர்விவகார அமைச்சு, தொழிற்துறை திணைக்களம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் மாபெரும் பிரதேச விற்பனைச் சந்தை ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை பஸ்தரிப்பு நிலையத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகியிருந்தது.

இந்த விற்பனை சந்தையில் புதுக்குடியிருப்பு பிரதேச உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்ததுடன் மக்கள், சமூகஆர்வலர்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்களை உற்சாகத்துடன் கொள்வனவு செய்திருந்தனர்.

மேற்படி பிரதேச உள்ளூர் உற்பத்தி கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தியை பார்வையிட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் உள்ளூர் உற்பத்தியாளர்களின் தேவைகளை கேட்டறிந்ததுடன், அவர்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதாகவும் உறுதியளித்திருந்தார். அத்துடன் இவ் உள்ளூர் உற்பத்தி சந்தையானது வாரம் தோறும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இங்கும் நடைபெறும் எனவும் தெரிவித்திருந்தார்.



















# 25 லட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்கு அரசாங்கம் திட்டம்

இந்த வருடத்தில் 25 லட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் வைத்தியர் சுனிமல் ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அதில் வடக்கின் முக்கோண வலயத்தில் 10 இலட்சம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் 15 இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேங்காய் விலை அதிகரித்தல், தென்னை உற்பத்திகளின் வீழ்ச்சி உட்பட தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் தொடர்பாக நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களைப் பார்க்கும் போது 2024 ஆம் ஆண்டில் தென்னை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடமராட்சியில் மயங்கி வீழ்ந்த உடற்கல்வி ஆசிரியர் மரணம்!



யாழ்ப்பாணம், வடமராட்சியில் திடீரென மயங்கி வீழ்ந்த ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நெல்லியடி மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியரான வடமராட்சி பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் தணிகைவேல் (வயது 47) என்பவரே உயிரிழந்தார்.

வதிரியில் உள்ள தனது வீட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திடீர் சுகவீனமுற்று மயங்கி வீழ்ந்த நிலையில், அவரை வீட்டார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.







# தமிழ் அறிஞர் முத்தையா எழுதிய ‘‘தமிழ் அறிவு’’ நூல் வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு வழங்கி வைப்பு

தமிழ் அறிஞர் கே.பி.முத்தையா எழுதிய “தமிழ் அறிவு” என்ற தமிழ் இலக்கண நூல் வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி பிரிவில் உள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை சிறீ இராமச்சந்திரனின் ஒருங்கிணைப்பில் மாணவர்களுக்கு இந்த நூல் வழங்கும் நிகழ்வு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, ஆழியவளை சிலோன் சேச் தமிழ் கலவன் வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம், அம்பன் அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, மணல் காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நடைபெற்றது.

இந்தப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தமிழ் பாடத்தைக் கற்கும் 135 மாணவர்களுக்கு இந்த நூல் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் செயலாளர் இரா.துரைரத்தினம், ஓய்வுபெற்ற அதிபரும் முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளருமான அ.சா. அரியகுமார். மூத்த ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன், பாடசாலை அதிபர்களான தவகோபால் யோகலிங்கம், கந்தசாமி சிவநேசன், நடராசா தேவராசா, குமாரவேல் கண்ணதாசன், கணேசமூர்த்தி உதயசீலன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.













# மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வீதியை நேரில் பார்வையிட்ட ஆளுநர்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி பிள்ளையார் கோயிலிருந்து அக்கரைவெளியிலிருந்து வரையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதான வீதியை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சென்று பார்வையிட்டார்.

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுகேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் 3,000 ஏக்கர் வரையிலான வயல் நிலத்துக்கு உள்ளீடுகளையும், விளைச்சலையும் கொண்டு சென்றுவருவதற்கு பயன்படுத்தும் பிரதான வீதியாக இந்த வீதியே இருந்து வரும் நிலையில் அதைப் பயன்படுத்த முடியாத நிலைமை இருப்பதாக விவசாயிகள் ஆளுநருக்கு இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்த வீதியின் சில பாலங்களும் அமைக்கப்படவேண்டியிருப்பதை இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஆர்.விஜயகுமார் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

வீதியை அபிவிருத்தி செய்வதற்கும் அத்துடன் பராமரிப்பது தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்புடைய திணைக்களங்களுடன் கலந்துரையாடலை விரைவில் நடத்தி முடிவு எடுப்பதாக ஆளுநர் இந்தப் பயணத்தின்போது விவசாயிகளிடம் தெரிவித்தார்.







# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பிரேமசங்கர் இன்று பதவியேற்கின்றார்



திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக இன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் உறுதியுரை எடுத்து பதவியேற்கிறார்.

கண்டி மேல் நீதிபதி சுமுது பிரேமச்சந்திரா, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பிரியந்த பேர்னாண்டோ மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகிய மூவருமே நாளை காலை 9 மணிக்கு பதவியேற்கின்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீதிவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் சுமார் 28 ஆண்டுகள் நீதிச் சேவையில் கடமையாற்றியுள்ளார்.

1967ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி யாழ்ப்பாணம், வடமராட்சி, துன்னாலையில் அன்னலிங்கம் (முன்னாள் அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர்) – மகாலக்ஷ்மி தம்பதியினருக்கு மகனாக அன்னலிங்கம் பிரேமசங்கர் பிறந்தார்.

துன்னாலை அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த அவர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்து சட்டத்துறையில் கல்வி கற்று சட்டத்தரணியானார்.

1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நீதித்துறை அலுவலராக நீதிபதி நியமனம் பெற்ற அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களில் ஒரே தடவையில் நீதிவானாகவும் (போர் இடம்பெற்ற காலப்பகுதியில்) மல்லாகம், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 14 ஆண்டுகள் நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த அன்னலிங்கம் பிரேமசங்கள் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகவும் (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றினால் அதிகரிக்க முன்னர்) பின்னர் 2013ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராகவும் பதவி வகித்தார். 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி முதல் மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு என மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் சுமார் 13 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில் 27 ஆண்டுகள் நீதிச் சேவையில் முதல் நிலை நீதிபதியாகத் தொடர்ந்த நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், தலைமை நீதியரசர் முருது பெர்னான்டோ தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையுடனும் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புக் கவுன்சிலின் ஒப்புதலுடனும் ஜனாதிபதியினால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படுகிறார்.

2000ம் ஆண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிவானாக செயற்பட்ட காலத்தில் மிருசுவிலில் ஐந்து வயது சிறுவன் உட்பட எட்டுப்பேரை சுட்டு படுகொலை செய்த வழக்கின் விசாரணைகளை உரிய வகையில் முன்னெடுத்தமைக்காக அந்த வழக்கின் தூக்குத் தண்டனை பெற்ற இராணுவச் சிப்பாயின் மேன்முறையீட்டை விசாரணை செய்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்த தீர்ப்பில் உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கருக்கு பாராட்டை கோடிட்டுக் காட்டியிருந்தது.

# தேசபந்து தென்னகோனை கைது செய்ய 6 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்காக 06 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை பெலேன பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும்



விசாரணைகளுக்கு அமைய முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னகோனுக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நீதிமன்றத்தில் பிடியானை பிறப்பிக்கப்பட்டு, ஆஜராகாமல் தவிர்ப்பவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தராதரம் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# கச்சதீவு உற்சவ ஆயத்தப் பணிகளில் இலங்கைக் கடற்படையினர் மும்முரம்

(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியாரின் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாட்டுப் பணிகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டுப் பணிகளிலேயே தற்போது கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கச்சதீவு உற்சவத்தில் இலங்கை இந்திய யாத்திரிகர்கள் 9 ஆயிரம் பேர் பங்குபற்றவுள்ள நிலையில் இவர்களிற்கான தற்காலிக இறங்கு தளம், தங்ககம், பூசை மண்டபம் என்பவற்றுடன், உணவு ஏற்பாடு முதல் நீர் விநியோகம் வரையில் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவம், கூடு வலம் வருதலைத் தொடர்ந்து மறுநாள் காலை விசேட திருப்பலிப் பூசையுடன் கொடி இறக்கத்தைத் தொடர்ந்து பூசைகள் நிறைவு பெறும்.

# வவுனியா மாநகரசபை உட்பட 4 சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தியது மக்கள் முன்னணி!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழ் தேசிய மக்கள் முன்னனி நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப் பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னனி அதன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் தனித்து போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப் பணத்தை கட்சியின் மாவட்ட கிளையினர் செலுத்தியிருந்தனர்.






# அம்பாறை மகளிர் தின நிகழ்வில் பிரதமர்

**(கே.எ.ஹமீட்)**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட பெண்கள் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 114வது மகளிர் தின விழா நேற்று முன்தினம் அம்பாறை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

“பெண்களின் வலிமையைக் கட்டியெழுப்புவோம்!“ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின விழாவிற்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் பிரிவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான முத்து ரத்வத்த தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விசேட உரையையும் நிகழ்த்தினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் பிரிவின் அங்கத்தவர்கள் பெருமளவினர் கலந்து கொண்டனர்.

பிரதியமைச்சரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரியந்த மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் பிரிவின் மாவட்ட மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அவை பார்வையாளர்கள் பலரினதும் வரவேற்பைப் பெற்றன.

பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் சமூக,அரசியல் செயற்பாட்டில் தலைமைதாங்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் இங்கு வலியுறுத்திப் பேசினார்.





# தெற்கைப் போலவே வடகிழக்கு பிள்ளைகளும் சிறந்த கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்துக!

## பிரதமர் ஹறிணியிடம் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



(விஜயரத்தினம் சரவணன்)

கல்விக்கான முதலீடு செலவல்ல, அது எதிர்காலத்திற்கான முதலீடு எனக் குறிப்பிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கல்விக்கான ஒதுக்கீடுகளை சமத்துவ அடிப்படையில் மேற்கொண்டு, தெற்கின் பிள்ளைகளைப் போல வடகிழக்கின் பிள்ளைகளும் தரமான, சமத்துவமான, சிறப்பான கல்வியைப் பெறுவதை இவ்வாண்டிலிருந்தே உறுதிப்படுத்துமாறு பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹறிணி அமரசூரியவை வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை வன்னியில் பெருமளவான பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதியின்மை, அதிபர், ஆசிரியர், பணியாளர்களின் ஆளணி வெற்றிடங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுதல் உள்ளிட்ட விடயங்களையும், தகவல் தொழில்நுட்ப கல்வியில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பின்தங்கிய நிலையில் காணப்படுவதையும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற, வரவு – செலவுத்திட்ட கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

பிரதமர் அவர்களே, நீங்கள்தான் கல்வி அமைச்சுக்கும் பொறுப்பாக இருக்கின்றீர்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை நம் எல்லோருக்கும் இருக்கின்றது.

அந்த வகையிலே கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் சிறந்து விளங்குதல் என்ற நோக்கிலே அரசின் இவ்வாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடுகள் அமையப்பெற்றிருக்கிறது. தேசிய அபிவிருத்திக்கான அடித்தளமே கல்வி என்ற வகையில் குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகள் இம்முறை இப்பாதீட்டிலே உள்ளடக்கப்பட்டமையை இந்த நேரத்தில் வரவேற்றுக்கொண்டு கல்விக்கான ஒதுக்கீடு தீவளாவிய வகையில் சமத்துவ அடிப்படையில் பகிரப்படுவதை தயவு செய்து உறுதிப்படுத்துங்கள் என்றே வன்னி மாவட்டத்தைச் சார்பாக்கும் நாடாளுமன்ற உறுப்பினராக நானும் கேட்டுக்கொள்கிறேன்.

பாடசாலை உட்கட்டுமான மேம்பாட்டுக்காக பத்தாயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். போதுமானதற்ற கட்டடங்கள், கட்டிமுடிக்கப்படாத வகுப்பறைக் கட்டடங்கள், நூலகங்கள், ஆய்வுகூடங்கள் இன்றி வன்னிப் பிராந்தியப் பாடசாலைகள் இன்னமும் இருப்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வன்னியில் வாழும் எங்கள் பிள்ளைகள், போதுமான ஆசிரியர்கள் இன்றி, இணைய வசதி இன்றி, முறையான வழிகாட்டல்கள் இன்றி பாடசாலை மட்டத்திலே மிகவும் இடர்படுகின்றார்கள்.

பாடசாலைகளில் நிலவும் இடைவிலகல்கள் இன்றளவும் வன்னிப்பிராந்தியத்தில் அபாயநிலையிலேயே காணப்படுவதை இப்பேரவையிலே முன்வைக்கிறேன்.

வன்னிமாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களில் முதன்மையானவை ஊழியர் பற்றாக்குறை. வன்னி மாவட்டத்தில் உள்ள 6 கல்வி வலயங்களில் குறிப்பாக முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம், அழகியல் பாடங்கள், விசேட கல்வி, உயர்தர பௌதிகவியல், இணைந்த கணிதம், வணிகக்கல்வி பாடங்களுக்கு ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகிறது. 1ஏபி பாடசாலை தொடக்கம் வகை 2சி பாடசாலை வரை உரிய பாட ஆசிரியர்கள் இன்மையால் நீங்கள் முன்மொழியும் தரமான கல்வியை எங்கள் மாணவர்கள் பெற இயலாதுள்ளனர். தரமான கல்வியைக் கொள்கையை எங்கள் வன்னியிலும் உறுதிப்படுத்துவீர்களா?

மிகவும் கடைசி நிலையில் STEM கல்வியில் உள்ள எங்கள் மாவட்டத்தின் முல்லைத்தீவின் ஆசிரிய ஆளணித் தேவைக்குக்கு உங்கள் வரவு – செலவுத் திட்டம் முன்னிரிமை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல பாடசாலைகள் போதுமான அளவில் கல்வி சார், கல்விசாரா ஊழியர்கள் இல்லை. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மாத்திரம் 392 ஆளணி வெற்றிடங்கள். இவர்களில் 322 ஆசிரியர்கள். அதிபர் சேவைக்குரியோர் 23, காவலாளிகள் 20 பேர், பாடசாலைப் பணியாளர்கள் 12. விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழினுட்பம் உட்பட பத்து துறைகளுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் இல்லை. 14 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை. வவுனியா தெற்கு வலயத்தில் 29 காவலாளிகள், 10 பாடசாலை பணியாளர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய கல்வி வலயங்களிலும் இத்தேவைப்பாடுகள் உண்டு. பட்டதாரிகளை உள்ளீர்ப்பு செய்யும் வகையில் பாடசாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நிரந்தரத்தீர்வு என்ன? நீங்கள் சொல்லும் தரமான கல்வி, சமத்துவமான கல்விக்கான வாய்ப்புகளை எங்கள் பிள்ளைகள் பெறுவதையும் உறுதிப்படுத்துங்கள். இதுவரை நாங்கள் பெறவில்லை என்பவற்றுக்கான சான்றுகளே இவை!

தகவல் தொழினுட்ப நிலைமாற்றத்திலும் ஏனைய 7 மாகாணங்களை விடவும் வடக்கும் கிழக்கும் பின்தங்கியே உள்ளது. இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் போதுமானதற்ற தகவல் தொழினுட்ப மற்றும் தொலைக் கல்வி நிலையங்கள் இல்லாத மாகாணங்கள் வடக்கும் கிழக்கும் தான். கிழக்கிலே 4 கல்வி வலயங்களிலும் வடக்கிலே 3 கல்வி வலயங்களிலும் தகவல் தொழினுட்ப வள நிலையங்கள் இல்லை. இந்தப்பாகுபாடு ஏன்? நாடாளுமன்ற உறுப்பினராக நான் சார்பாகும் வன்னிமாவட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கும் மன்னார் கல்வி வலயத்திற்கும் இதுவரை அவ்வளநிலையங்கள் ஏன் இன்னமும் வழங்கப்படவில்லை? இங்குள்ள ஆசிரியர்கள் போதுமான பயிற்சியை பெறும் வசதிகள் அற்று காணப்படுகின்றனர். இங்குள்ள பெரும்பகுதி கணினிகள்

தொடர்ச்சி ▼

# தெற்கைப் போலவே வடகிழக்கு பிள்ளைகளும் சிறந்த கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்துக!

தொடர்ச்சி▲

பழுதடைந்து காணப்படுகின்றன. இலத்திரனியல் கருவிகளை பதிவழிப்பதில் உள்ள இறுக்கமான நடைமுறையால் பல பாடசாலைகளில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல கணினிகள் இலத்திரனியல் குப்பைகளாக அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன.

2024 இன் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே 57 வீத மேசைக்கணினிகள் பழுதடைந்து காணப்படுவதை இனங்காண முடிந்தது. வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 75 வீத மேசைக்கணினிகள் பழுதடைந்துள்ளன. திருத்தப்படாதுள்ள கணினிகள் கிடப்பில் போடப்படும் போது சிறுபிழைகள் பெரும்பிழைகளாகின்றன. காவலாளிகள் இன்றிய சூழலில் அறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பழுதான கணினிகளின் பாகங்கள் களவு போகின்றன. இலத்திரனியல் கருவிகளின் திருத்தம் மற்றும் பதிவழித்தலில் உள்ள இறுக்கமான நடைமுறைகளால் நாடுமுழுதும் உள்ள பாடசாலைகள் இடர்களை எதிர்நோக்குகின்றனர். ஆய்வாளர் கருணாகரன் உள்ளிட்ட பலரின் ஆய்வுகளும் இதற்குச்சான்று. கௌரவ இலத்திரனியல் கணினிகளை முகாமை செய்வதில் பொருத்தமான சாத்தியப்பாடான நடைமுறைகளை கொள்கை அளவில் ஏற்படுத்துங்கள் எனக்கேட்டுக்கொள்கிறேன்.

தொழினுட்ப நிலைமாற்றத்துக்கு மேலாக, வன்னியில் உள்ள பல பாடசாலைகளில் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. பல வன்னிப்பாடசாலைகளில் முறையான சுகாதார வசதிகள் இல்லை. இது மாணவிகளைப் பாதிக்கிறது. பல பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லை. STEM கல்விக்குத் தேவையான செயன்முறை பயிற்சிகளை எங்கள் மாணவர்கள் பெற இயலாதுள்ளார்கள். வன்னிப் பிராந்தியப் பாடசாலைகளில் நூலக வலுவூட்டலும் தேவை.

தெற்கின் பிள்ளைகளைப் போல வடகிழக்கின் பிள்ளைகளும் தரமான, சமத்துவமான, சிறப்பான கல்வியை பெறுவதை இவ்வாண்டிலிந்தே சான்றாக்குவோம்.

தாங்கள் அறிந்தது தான். கல்விக்கான முதலீடு செலவல்ல. அது சிறந்ததோர் எதிர்காலத்துக்கான முதலீடு – என்றார்.



# அம்பாறை மாவட்டத்தில் மு.காவின் தேர்தல் முன்னாயத்தக் கலந்தாய்வு

(கே.எ.ஹமீட்)

அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் விசேட கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் நேற்று ஒலுவில் கிறீன் வாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். உதுமாலெப்பை, கட்சியின் பொருளாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.சீ.சமால்தீன், உயிர் பீட உறுப்பினர் சப்றாஸ் , பொத்துவில் பிரதேச உச்ச பீட உறுப்பினர்கள், மத்திய குழுக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





# மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக தமிழ் நாடு முழுவதும் தி.மு.கவினர் போராட்டம்

தமிழக எம்.பி.க்களை 'அநாகரிக மானவர்கள்' என நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்த மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் தி.மு.கவினர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை மயிலாப்பூரில் எம்.எல்.ஏ. மயிலை வேலு தலைமையில் தி.மு.கவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் சிந்தாதிரிப்பேட்டையிலும், தொடர்ந்து ஆழ்வார்ப்பேட்டை, சைதாப்பேட்டையிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திருவல்லிக்கேணியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தர்மேந்திர பிரதானின் உருவபொம்மையை எரித்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சேலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை சந்திப்பு அருகே கட்சியின் மாநகர செயலாளர் ரகுபதி தலைமையில் தி.மு.கவினர் 150 இற்கும் மேற்பட்டோர் திரண்டு மத்திய அமைச்சரின் உருவ பொம்மையை எரித்து முழக்கங்களை எழுப்பினர். தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட பொறுப்பாளர் தர்மசெல்வன் தலைமையில் பென்னாகரம் பஸ் நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் பழனியப்பன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி பஸ் நிலையம் அருகிலும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட அவைத்தலைவர் தட்ர அள்ளி நாகராஜ் தலைமையில் கிருஷ்ணகிரி ரவுண்டானாவிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

மதுரையில் மாநகர இளைஞரணி துணை செயலாளர் மூவேந்தன் தலைமையில் பெரியார் பஸ் நிலையம் அருகே மத்திய அமைச்சரின் உருவ பொம்மையை எரித்து, கண்டன முழக்கங்களை எழுப்பினர். விழுப்புரத்தில் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் உருவ பொம்மையை எரித்து போராட்டம் நடந்தது. கடலூர் மாநகர தி.மு.க. செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமையில் கடலூர் பாரதி வீதியில் மத்திய அமைச்சரின் உருவ பொம்மையை எரித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டையில் நடந்த ஆர்ப்பாட்டத்திலும் உருவ பொம்மை எரிக்கப்பட்டது. தூத்துக்குடியில் தர்மேந்திர பிரதான், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஆகியோரின் உருவப்படங்களை கிழித்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

நாடாளுமன்ற வரவு – செலவு திட்ட கூட்டத்தொடரின் 2 ஆவது அமர்வு நேற்று திங்கள் கிழமை தொடங்கியது. தமிழகத்துக்கு கல்வி நிதி மறுப்பு விவகாரம் குறித்து தி.மு.க. எம்.பி.க்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்து பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், 'தேசிய கல்விக் கொள்கை மூலம் இந்தி திணிக்கப்படுகிறது என்பது தவறானது. தமிழக மாணவர்களை தி.மு.க. தவறாக வழிநடத்தி அரசியல் செய்கிறது. தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை மாநில அரசு பாழடித்து வருகிறது. தமிழக எம்.பி.க்கள் ஜனநாயகமற்றவர்கள், அநாகரிகமானவர்கள்' என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, அவரது பேச்சுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த தி.மு.க. எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்து, நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர். அதன்பின், மத்திய அமைச்சர் தர்மேந்திரா பிரதான், 'நான் தமிழக எம்.பி.க்களை தவறாக பேசவில்லை. எனினும் நான் பேசியது புண்படுத்தி இருந்தால், எனது வார்த்தைகளை திரும்ப பெற்று கொள்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

# பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக திருவள்ளூரில் த.வெ.க. ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில் இடம்பெறும் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக திருவள்ளூரில் தமிழக வெற்றிக் கழகத்தினர் நேற்று திங்கள் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவள்ளூர் தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில், தமிழகத்தில் நடைபெறும் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, தமிழகத்தில் பாடசாலை – கல்லூரிகளில், பஸ் நிலையங்களில், ரயில் நிலையங்களில், மருத்துவமனைகளில் நடக்கும் பாலியல் வன்கொடுமைகளைக் கட்டுப்படுத்தத் தவறியதாக தி.மு.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.




திருவள்ளூரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட த.வெ.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.



# சிரியாவில் தொடரும் வன்முறை; 1,000க்கும் மேற்பட்டோர் பலி!

சிரியாவின் பாதுகாப்புப் படையினருக்கும், முன்னாள் ஜனாதிபதி அல் ஆசாதின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவத்தில் இதுவரை 1000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் நாட்டில் அமைதியை நிலைநாட்ட அனைவரும் முற்பட வேண்டுமென சிரியாவின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாம் ஒரு சிக்கலான சூழலில் நின்று கொண்டிருக்கிறோம். புதிய ஆபத்தை எதிர்கொண்டுள்ளோம். முன்னாள் ஆட்சியாளர்களுக்கு ஆதரவு தரும் அந்நியர்கள் புதிய கலவரத்தை உருவாக்கியுள்ளனர்.

நமது ஒற்றுமையை, ஸ்திரத்தன்மையைக் குலைக்க அவர்கள் முயற்சிக்கின்றனர். சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். வன்முறைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

கலவரப் பின்னணி குறித்து முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

தேசிய ஒருமைப்பாட்டை நாம் பேண வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜேர்மனியில் நூற்றுக்கணக்கான விமான சேவைகள் இரத்து!







ஜேர்மனி விமான நிலைய பணியாளர்கள் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளை முன்னிறுத்தி நாடளாவிய ரீதியாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையினால் நூற்றுக்கணக்கான விமான சேவைகள் இரத்தாகியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் ஹம்பேக் விமான நிலையத்தில் எதிர்பாராத விதமாக இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அது நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பாக விஸ்தரிக்கப்பட்டது.

அதற்கமைய, பிராங்ஃபர்ட், மியூனிக், பேர்லின் மற்றும் பிற முக்கிய விமான நிலையங்களுக்குப் பயணிகள் செல்வதைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாடளாவிய ரீதியாக விமான சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

குறிப்பாக ஜேர்மனியின் மிகவும் பரபரப்பான விமான நிலையமான பிராங்பர்ட். முற்று முழுதாக செயலிழந்துள்ளதாக அந்த நாட்டின் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று காலை புறப்படவிருந்த 143 நீண்டதூர விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சேவைகள் இரத்து செய்யப்பட்ட நிலையில். 5 லட்சத்திற்கும் அதிகமான பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத்துறை மற்றும் போக்குவரத்து ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேர்டி தொழிற்சங்கம், முன்னறிவிப்பு எதுவும் அற்ற நிலையில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்தமை நியாயமற்றது என ஜேர்மனிய ஊடகங்கள் கண்டித்துள்ளன.

எவ்வாறாயினும், ஊழியர்கள் எதிர்நோக்கும் வேதன உயர்வு மற்றும் சிறந்த சலுகைகளைப் பெறுவதற்கு வேறு வழியில்லை எனவும் அந்த சங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.03.2025




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் முயற்சி மூலம் இலக்கை அடைவீர்கள். உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று தன் னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை தரத்துடன்முடித்துத் தருவீர்கள். பணியிடத்தில்உங்கள் திறமையின் மூலம் நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம்அன்பாக இருப்பீர்கள். அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணப்புழக்கம் காணப்படும். புதிய முதலீடுகளில் பணத்தை சேமித்து பயனடையலாம்.

இன்று நல்ல ஆரோக்கியமும் தன்னம்பிக்கையும் காணப்படும். அதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று வளர்ச்சி குறைவாக காணப்படும். பெரிய லட்சியங்களை அடைய இன்று சாத்தியம் குறைவாக இருக்ககும். சிறப்பாக திட்டமிட்டால் இன்று வெற்றி அடையலாம்.

உங்கள் மேலதிகாரிகளால் எதிர்பாராத தொல்லைகள் ஏற்படும். கடினமான பணிகள்காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் மனதில் அசௌகரியமான உணர்வு இருக்கும்.இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்ககும்.

பணவளர்ச்சி திருப்திகரமாக இருக்காது.இன்றைய செலவுகளை சமாளிக்க இயலாது.திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

ஒவ்வாமை காரணமாக தொண்டையில் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருங்கள். வெற்றி பெறுவதற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில உங்களுக்கு திருப்தி காணப்படாது. உறுதியுடனும் கவனமாகவும் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் சகஜமாக இருக்க இயலாது. அவரை வெளியிடங்களுக்கு கூட்டிச் செல்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

வயிறு உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். கார உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதியாக இருக்க வேண்டிய நாள்.தெய்வீகப் பாடல்களை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதலைப் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களின்ஆதரவு குறைந்து காணப்படும்.பெண் ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

உங்களுக்கு சில குடும்ப பிரச்சினைகள் காணப்படும். இதனால் உங்கள் பிரியமானவருடன் நேரத்தை கழிக்க இயலாது. உங்களால் முடிந்த அளவு அவருக்கு நேரம் ஒதுக்குங்கள்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும்.மேலும் பண இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கண் காணியுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

நீங்கள் குறைந்த நேரத்தில் விரைவாக பணியை முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை கையாள்வீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.




குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். இன்று நகைச்சுவை போக்கின் காரணமாக சிறந்ததை சாதிப்பீர்கள்.

சிக்கலான பணகளைக் கூட எளிதில் கையாள்வீர்கள். இன்று உங்களுக்கு புதிய பணிகள் வழங்கப்படும். நீங்கள் அதனை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். எளிதில் சேமிக்க இயலும். எதிர் காலத்துக்கென சிறிது பணத்தை ஒதுக்குவீர்கள்.

இன்று நீங்கள் மிகுந்த ஆற்றலுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள்.




விஷயங்களைக் கையாள்வதில் நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று சிறிதளவு பொறுமை அவசியம்.

இன்று அதிக பணிச்சுமை காணப்படும். ஆனால் முறையான திட்டமிடல் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். உங்கள் சக பணியாளர்களை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு வளர சுமாரான வாய்ப்புகளே உள்ளன.

சிறிய கடன் மூலம் உங்களுக்கு பணம் கிடைக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

இன்று பயணத்தின் போது அல்லது வாகனம் ஓட்டும் போது விபத்தை சந்திக்கநேரலாம்.




இன்று சற்று சிரமமான நாள்.இன்று பொறுமையும் உறுதியும் மிகவும் அவசியம்.சரியான திட்டமிடல் மிகவும் அவசியம்.

இன்று பணிச்சூழல் பரபரப்பாக காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடன் சில சிக்கல்கள் காணப்டும். உங்கள் பணிகளை திட்டமிடுவது நல்லது.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான விவாதம் காரணமாக நீங்கள் சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தேவையற்ற விஷயங்களுக்காக இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.03.2025




பிரார்த்தனை மற்றும் தியானம் இன்று உங்களுக்கு வழி காட்டும். அதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி பெறுவீர்கள். இன்று அனைத்தும் உங்கள் கையில்தான் உள்ளது.

பணியிடச் சூழல் சவாலானதாகவும் போட்டியுடையதாகவும் காணப்படும். கடினமாக பணிகளைக் கையாள்வதை சவாலாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் சமூகமான உறவு காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை கவலையளிப்பதாக இருக்கும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்காது. இன்று செலவுகள் அதிகம செய்ய நேரலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் அமைதியான அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெற்றியும் கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக காணப்படும். இதனால் தவறுகள் நேரலாம். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லாவிடில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற கவலைகள் காரணமாக உங்களுக்கு தோள்களில் மற்றும் முதுகில் வலி ஏற்படலாம்.




இன்று உங்களிடம் தைரியமும் உறுதியும் காணப்படும். இதனால் வளர்ச்சி காணட்டும். தைரியமான மனவலிமை காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் அபாரமான வளர்ச்சி காணப்படுகின்றது. பணியின் மூலம் ஆதாயம் பெற இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். அன்பு நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய முதலீடுகள் செய்வதற்கு உகந்த நாள். அதன் மூலம் மிகுதியாக பணம் கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று மிகவும்ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் சிறப்பாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

விரைந்து பணிகளை முடிக்க உங்கள் சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். பணிகள் அதிகமாக இருப்பதால் கட்டுப்படுத்துவது உங்கள் கைமீறிய செயலாக இருக்கும். உங்கள் திறமையை பணியிடத்தில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

உங்களின்அகந்தைப் போக்கும் பிடிவாதமும் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சூழ்நிலைக்கேற்ப நீங்கள் உங்கள் துணையுடன்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

சில தேவையற்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

# திருமலையில் 15 வயது மாணவி துஷ்பிரயோகம் முல்லைத்தீவில் குடும்பஸ்தர் ஞாயிறன்று கைது





(பா.சதீசன்)

திருகோணமலையில் 15 வயதுடைய மாணவி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் முல்லைத்தீவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் திருகோணமலையில் உள்ள மனைவியின் சித்தி வீட்டிற்குப் போய்வருவது வழக்கமான நிலையில் சித்தியின் மகளான 15 வயதுடைய பாடசாலை மாணவியை அதிக நாள்களாகத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் மாணவிக்கு உடல் நிலையில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மாணவி திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பரிசோதனைக் குட்படுத்தபட்டபோது மாணவி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியிருப்பது தெரியவந்துள்ளது.

அதனையடுத்து மாணவியிடம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் விசாரணையின் பின்னர் நேற்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை இம்மாதம் 20 ஆன் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 33 வயதுடையவர். தீர்த்தக்கரை சிலாவத்தையில் வசிக்கும் மீனவர் சங்கத் தலைவர் என்றும் கூறப்பட்டது.